

# பொறுமையும் / பொருமையும் // பொங்கல் மலர் ///

14.1.2009.

பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா






# பொறுமையும்!
# பொருமையும்!!
# பொங்கல் மலர்!!!

14.1.2009.

# பொருளடக்கம்

1. ஸ்ரீபிரம்மரிஷி வஷிஸ்டரும் ஸ்ரீமகரிஷி விஸ்வாமித்திரரும்---1

எல்லாம் நீ!



(ஸத்தியவாக்கை) (1)

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலை பெறும்!"

"ஸ்ரீஸத்குரு திருவடி துணை"! நம்பினோர் கெடுவதில்லை"

"தெய்வம் மனுஷ்யாணம்! யத்பாவம் தத்பவதி"


"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம், ஓம்!"

"அகம்பிரம்மம், ஜெகம்பிரம்மம், அகமே எல்லாம்!

ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!

ஓம் ஆத்மானந்த குழந்தைகளே! உங்கள் அடக்கத்தினால், ஜீவன் முக்தி பெற்று விட்டீர்கள் என, உறுதி கூறுகிறோம். இந்த இதழில், வரும் இருமஹாத்மாக்கள்! எப்படி ஒருவர் பொறுமையையும்! பணிவையும்! எப்படி தருகிறார் என்றும், ஒருவர் எப்படி பெறுகிறார் என்றும், கருத்தூன்றி, உணர்ந்து, அவ்வண்ணம் ஆகுக என, ஆசி வழங்குகிறோம். — ஜெ பகவா

௨



# ஸ்ரீ பிரம்மரிஷி வசிஷ்டரும்! ஸ்ரீ மஹரிஷி விஸ்வாமித்திரரும்!

## (A) பிராமண தர்மம்!

(1) வேதம் கற்றவே பிராமண குலமாகும்.

(௨) உஞ்சவிருத்தியே, (பிக்ஷை ஏற்றவே) அவன் ஜீவனமாகும்.

(3) வாக்கை அடக்குகவே, அவன் பிராணாயாமம் ஆகும்.

(4) தாம் கற்ற வேதத்தை, முறையோடு, தகுதி உடையோருக்கு, இலவசமாக போதித்தவே, அவன் செய்யும், தர்மம் ஆகும்.

(5) ஸத்தியம் பேசுகவே, அவன் பிராணன் ஆகும்.


(6) பொறுமையும்! (எதையும் நமதே என ஏற்றல், எதையும் விட்டுக் கொடுத்தல்; இருப்பதிலும்;



பொறுமை என்றால்? ஓ
நம்மிடம் இல்லா
தது அவனிடம் இருக்கி
றதே என்றும், என்னி
லும் அவன் எப்படி உய
ர்வாம் என்றும், தன்னை
உயர்த்தி! பிறரை தாழ்த்தி
அந்த போட்டியாலே எழும் ஹரோஷ! குரோத!
கனல் அடங்கும்.

கிடைப்பதிலும், நடப்பதிலும், ஸ்ரீபகவன்நாம
உணர்வோடு, இது போதும் என்ற நிறைவோடு,
அமைதியின் ஆனந்தமாக இருத்தல், தம்மால்
பிறருக்கு, சொல்லாலும் செயலாலும், ஊறு
துன்பம் செய்யாதிருத்தல், மூர்கவனமும்,
தற்காப்பும், இல்லாதிருத்தல், பொறுமையாகவும்
பணிவும்!
இயன்ற அளவில், சாஷ்டாங்க நமஸ்காரம்,
இயலாத நிலையில், குனிந்த நிலை நமஸ்காரம்,
குனியவும் இயலாத நிலையில், கரம் மார்போடு
ஒட்டிய நிலையில், பணிந்த நிலையில் நமஸ்காரம்,
எதிர் வார்த்தை! எரிந்த வார்த்தை! மறுப்பு வார்த்தை!
பேசாமலும், மேலே கூறிய நிலையில், அறிந்தோ!
அறியாமலோ! எவரேனும் பேசினால், இது

## பொறுமையும், பொறாமையும்



பிரம்மத்தை
உணர்ந்தவனே
பிராமணன் ஆவான்.
நிஷ்டை என்றால்
நீ இஷ்டப்பட்டு
பெறும் ஓர் தபமாகும்
ஆகவே பிரம்ம
நிஷ்டானுசந்தனம்
செய்பவனே பிராமணன் ஆகும். ஏனையோர்
பிராமணதகார்.

ஸ்ரீபகவான் வாக்கே! நம் மனப்பரிசையின்
நிமித்தம், நம்மை பரிசோதிக்கிறது என, இன்
முகமாக, ஏற்றவே பணிவு ஆகும். மேலே கூறிய
இந்த பொறுமையும் & பணிவும்! உடையவனே,
**பிராமணன்!** ஆகும். இந்த ஆறு
நிலைகளையும் ஏற்றவே, பிராமண தர்மம் ஆகும்.
இந்த பிராமணனை, பார்ப்பான்! என்றும்,
பார்ப்பனவன்! என்றும், கூறுவதுண்டு.
அதாவது சாட்சியாக பார்ப்பவன்! அதாவது
ஸ்ரீபகவத் சாட்சி சைதன்யமாக இருப்பவன்! என்றும்,
பொருள்படும். ஆகவே பார்ப்பனன் என்பது ஜாதி
குலம், கோத்ரம், அல்ல. மேலே கூறிய, ஆறும்
நிரம்பியவன் எவனோ, அவனே பிராமணன் என்றும்
பார்ப்பவன் என்றும், ஸ்ரீ ஞானிகள் சொல்வர்.



வீரம் இருந்தால் (5)
வீராவேசமும்!
அதனை தோன்றும்;
கோபாவேசமும்!
அந்த இச்சையின் பலத்தால் மோஹாவேசமும்! உண்டாகும்.
தொடரும்

(B)

க்ஷத்திரிய தர்மம்:- முன்பு கூறிய பிராமணன் அறிவாளியாகும். இதில் கூறும் க்ஷத்திரியன், புத்திசாலியாகும்.

(1) இவன் நீதிவழங்கக் கூடியவனாகும்.


(2) இவன் அப்பிராமணனை, குருவாக ஏற்கக் கூடியவனாகும்.

(3) இவன் பாதுகாக்கும், ஓர் காவலனாக, கண்டிப்பும் தண்டிப்பும் உள்ளவனாகும்.

(4) இவன், வீரத்தின் சின்னமானபடியால், இவனிடம் பணிவு இருக்கவாகாது. இருக்க இயலாது.

(5) இவனிடம் அஹங்காரம்! அதிகாரம்! ஆதிக்கம்! ஆகிய, இம் மூன்றும், நிரம்பி இருக்க வேண்டும்!

(6) ஆனால் இவன், தெய்வ நம்பிக்கையுடன், தெய்வத்தின், பிரதிநிதியாக இருப்பான்.



6

இவ் இரண்டும் இணைபிரியாத நண்பர்கள் ஆகும். இவ் இருவரும் இருக்கும் இடத்தில் கண்டிப்பாக **விவேகம்** இருக்க முடியாது.

விவேகம் என்பது எதில் தோன்றும் என்றால்?
தொடரும்

மேலே கண்ட, இந்த ஆறும், க்ஷத்திரிய குணங்கள் ஆகும். இதுவே க்ஷத்திரிய தர்மமும் ஆகும்.

இனி பிராமண தர்மத்தையும்! க்ஷத்திரிய தர்மத்தையும்! வைத்து, பொறுமையும் பணிவும்! இதன் எதிர் மறையான, அஹங்கார, அதிகார, ஆதிக்க, போட்டி பொறாமையும்! எப்படி பாடம் நடத்துகிறது என, அறிவூன்றி கருத்தால் உணர்க.

**கௌசிகன்** என்ற மன்னன்! க்ஷத்திரியன் கானகத்தில், வேட்டையாட சென்றான். வரும் வழியில், ஓர் ஆஸ்ரமம் இருக்கக் கண்டான். அந்த ஆஸ்ரமம், பிரம்ம ரிஷி **வசிஷ்டர்** என்ற, ஸ்ரீ மஹாத்மா வினுடையதாகும்.



விவேகம் தோன்றும் இடம்:- 7

பொறுமை!

கருணை! பணிவு!

வாக்கில் கனிவு!

செயலில் நிதானம்!

ஸ்பாம் நவமே எண்மதில் தொடரும்

அரசனைக் கண்ட ஸ்ரீ வஷிஸ்டர் முகமன் கூறி, அன்புடன் வரவேற்றார்.

ஸ்ரீ வஷிஸ்டர்:- (வணக்கம் கூறிய, மன்னனை நோக்கி) மன்னா! வேட்டையாடி, மிகவும் களைப்பாக வந்திருக்கிறாய். சற்று இங்கு இளைப்பாறுவாயாக. உணவு அருந்தி விட்டு, நிதானமாக செல்லலாமே?

கௌஷிகன்:- குருமஹாராஜ்! தாங்கள் உபசாரத்திற்கு, மிக்க நன்றி. உணவு அருந்துவதாக இருந்தால் நான் ஒருவன் மட்டும் அல்ல. என் சேனை வீரர்கள்! அனேகர் இருக்கின்றனர். ஆனால் தாங்களோ, ஓர் குடிசை வாசி. ஆனால் நானோ! ஓர் அரண்மனை வாசி. என்னை! உபசரிக்கும் அளவுக்கு, தாங்களிடம், எந்த வசதிகளும் இல்லை.

ஆனாலும்? தாங்கள், வாங்கிச் சாப்பிடக் கூடியவர். ஆனால் நான்! கொடுத்துச் சாப்பிடக் கூடியவன்.



அசைக்கமுடியாத நம்பிக்கை! (8)

எதையும் ஏற்றுக் கொள்ளும் சகிப்புத் தன்மை! எதிலும் எவரிடமும் தீமையென காணாமையும், உணராமையும் விவேகம் ஆகும். முடிந்தது.


ஸ்ரீ வஷிஸ்டர்:— (சிரித்துக் கொண்டே) பரவாயில்லை மன்னா! அந்த கவலை உனக்கு வேண்டாம். வீட்டுக்கு வந்தவர்களை, வெறுமனே அனுப்புவது, தர்மம் ஆகாது. இந்த எளியேன், என் சக்திக்கு ஏற்றவாறு, ஏதோ பசிக்கு உணவு தருகிறேன். ஏற்றுக்கொள்வாயாக.

கௌசிகன்:— நானும் என் படைகளும், ஒரு ஐம்பது பேருக்குக், குறையாமல் இருப்போம். இத்தனை பேருக்கும், ஆகாரம் எப்படி, உம்மால் போடமுடியும்? (அரசன் வியந்தான்)

ஸ்ரீ வஷிஸ்டர் பிரான், அவரையும், அமரச்செய்தார். நந்தினி என அன்போடு அழைத்தார்.

நந்தினி என்ற, அக்காமதேனு (பசு) வருவது போல் அக்குடிலின், பின் பக்கம் இருந்து இயல்பாக வந்து, ஸ்ரீ ஸ்வாமிகளின், ஸ்ரீ பாத நமஸ்காரம் செய்து, அவர் பக்கமாக ஓரமாக, பணிவாக நின்றது.

ஸ்ரீ வஷிஸ்டர்:— அம்மா! அனைவர்க்கும், தேவையின் உணவை! தேவையான அளவு! படைப்பாயாக.



பார்ப்பனன்!
பார்ப்பான்!
பார்ப்பவன்!
ஆகிய இம் மூன்றும்
ஒரே அர்த்தத்தைக்
குறிப்பதாகும். இதை
வேதாந்த கருத்து எப்படி
சொல்கிறது என்றால்?

9

**காண்பவனை** (பார்ப்பவனை) ஒரு. என்றும்; தொடரும்.

என மனவாக, விண்ணப்பித்தார், ஸ்வாமிகள். ஒரு நொடிக்குள், அனைவர்க்கும், விருப்பமான உணவு! தேவைக் கேற்றவாறு! பரிமாறப்பட்டன. அனைவரும், உண்டு மகிழ்ந்தனர். ஆனால்? அரசனுக்கு, மகிழ்ச்சி வரவில்லை. மாறாக, **பொறாமைத் தீ** பற்ற ஆரம்பித்தது.

அவன் எண்ணம்:— இவன் ஒற்றை பிராமணன். ஒரு குடிசையில் வாழ்பவன். இந்த ஒண்டிக் கட்டைக்கு! இப்பசு தேவையா? **நான்!** வசோடாப வசூடி மக்களை, கட்டி ஆள்கிறேன். **என்னிடம்!** இல்லாத ஒன்று, இவனிடம் இருக்க வேண்டுமோ? **நான்!** கொடுக்கால் பெருமையாகும். இவன் கொடுக்கால், சிறுமை தானே?



உ

காணும் 10

பொருளாக இராதே!
எனும் பொருள்படும்.
அதாவது காணியவன்
அறிவு என்ற ஸ்ரீ பகவானுக்கும்
ஸ்ரீ பகவான் என்ற ஆத்மாவாகும்
காணும் பொருள் நாமரூப ஜகமாகும்
தொடரும்

கொடுத்தால், வாங்குவோம்! மறுத்தால்
எடுத்துக் (பிடுங்கிக்) கொள்வோம்! என்
ராஜ்யத்தில், என்னிடம் இல்லாத ஒன்று, இங்கு
எவரிடமும், இருக்கலாகாது. இது என்
க்ஷத்திரியரின் பரம்பரையாகும்,
என முடிவு செய்தான்.

கௌஷிகன்:— குரு மஹாராஜ்! ஓர் விண்ணப்பம்?
தாங்களுக்கு இப்பசு தேவைதானா?

ஸ்ரீ வஷிஷ்டர்:— (ஆகாயத்தை பார்த்தநிலையில்)
ஏன் இந்த கேள்வி அரசே? இக்கேள்வி தேவை
இல்லையென, எமக்குத் தோன்றுகிறது?

கௌஷிகன்:— தேவைதான் பிரம்மோத்தமரே!
தேவைதான்! நான்! ஓர் அரசன். நான்!
குடிமகனிடம், கேட்க எனக்கு உரிமை உண்டு.

ஸ்ரீ வஷிஷ்டர்:— (சிரித்துக் கொண்டே) ஹே அரசே!
யாம் உன் குடிமகனல்ல! யாம் உன்!
குலகுரு! குருவுக்கு உரிய மரியாதையை,



11

நாம ரூப ஜக
சொரூபமானது
மனமெய கற்பனையின்
தோற்ற குண வடிவமாகும்
அது புண்ணிய மாயத்தின்
ஜனன மரண விகாரம்.

ஆகவே நாம ரூப ஜக சொரூபமாகாமல்
காணும் ஆத்மாவாகவே இருகின்றது என
உணர வேண்டும். முடிந்தது.

கொடுத்தால், உன் மரியாதை நிலைக்கும்.
இல்லையெனில், நிலைமை மாறிவிடும்!! மேலும்
உன்னிடம் இருப்பதோ, கோடானு கோடி மக்கள்
சொத்து. அந்த மக்கள் நலனுக்காக, மக்களை வைத்தே
நீ எப்படியும் பயன்படுத்தலாம் ஆனால்?
அதிதிகளுக்காக, எம் இறைவனால், வழங்கிய
எமக்கு இருப்பதோ, இவ் ஒன்று தான். மேலும் இது
தேவபசு! இதன் மேல் ஆசை வைத்தால், அது
விபரீதமாய் முடியும். கவனம் தேவை.

கௌஷிகர்:— மிரட்டுகிறீரா???

ஸ்ரீவஷிஸ்டர்:— இல்லை, எச்சரிக்கிறேன்.

கௌஷிகன்:— ஓய் அந்தணா! வீண் வார்த்தை வேண்டாம்.
பசுவை கொடுக்கிறாயா? நான் எடுக்கட்டுமா?

ஸ்ரீவஷிஸ்டர்:— (பலமாகவே சிரித்து விட்டார்)
ஹே அரசே! இப் பிரமத்தை, விலை கொடுத்தே
வாங்க, துணிந்து விட்டாய் போலும்?

கௌஷிகன்:— ஏ பிராமணா! நீ என்! பிரஜை!
நான்! உன் அரசன். என்! ஆணையின்,



நம் கௌஷிகன் (பூ)
தாம் நடத்தும்
வேள்வியில் ஓர் புருஷ
பசுவை அர்க்யமாக
தருவோம் என ஸ்ரீ பரமேஸ்
வரனிடம் வாக்களித்தபடி
இவன் உள்ளத்தில் எண்ணம்
அந்த வஷிஸ்டரே என எண்ணி விட்டான்.
இதை மறந்தவோ! மறுக்கவோ! விலக்கவோ! முடியாது
நாடகம்

உடம்பட்ட தெய்வாம் என்! சொத்து. அதை
எங்கே தொடர்கும். எங்கு!
நொறுக்கவும்! எரிக்கவும்! அதிகாரம் உண்டு.
அதை தடுக்க, இங்கு எவர்க்கும் அதிகாரம் இல்லை.

அதை மூதவிப், தெரிந்து கொண்ட வீரர்களின் அதட்டினன்
யாரங்கே? இப்பசுவை, நம் அரண்மனைக்கு,
இழுத்துச் செல்லுங்கள் என்று அதிகாரமாக.
பரிவஷிஸ்டர் :- அம்மா! உன்னை நியாது காத்
துக்கொள் என, புன்முறுவலாக கூறிவிட்டு,
குடிலினுள்ளே சென்று, தம் ஆஸனத்தில் அமர்ந்து
விட்டார். ஸ்ரீ ஸ்வாமிகள்.

ஒரு நான்கு பேர், பசுவின் பக்கம் வந்தனர்.
அப்பசுவின், பின்புறம் இருந்து, நான்கு வீரர்கள்
தோன்றி இறங்கி அந்நால்வரையும் அழித்தனர்.
மற்றும் இருந்த வீரர்களையும், அரசனையும்
அத்தனை பேருக்கும், அத்தனை போர் வீரர்களும்,




(13)

இவ்வெண்ணத்தை
சர்வக்ஞராகிய
வஷிஸ்டரும்
உணர்ந்து கொண்டார்
ஆகவே வேறு எவரை
யும் விரும்பவோ
அழைக்கவோ இல்லை.
இதன் முக்கியம் என்ன
வென்றால்? அதி உக்ர

துஷ்ட கோப குண **க்ஷத்ரிய!**
தொடரும் வெறியை

அரசன் தன்னை மறந்தான்.

அப்பசுவின் பின்புறம் இருந்தே, தோன்றி வந்து
அனைவரையும், அழித்து விட்டு அனைவரும்
வந்த இடத்திலேயே, சென்று மறைந்தனர்.
அரசன் ஆச்சரியமும், ஆத்திரமும், அடைந்தான்,
அரசன் **கோபாவேசத்தால்!**
அறிவிழந்தான். தான் அரசன் என்ற கர்வத்தால்,
துடி துடித்தான். ஆத்திரம்! அதிகாரம்! ஆவேசம்!
அவன் கண்களை மறைத்து விட்டது.
கௌஷிகன்:— (அவறனென்) **ஏ ஒற்றை
பார்ப்பனனே!** உன்னை என்ன
செய்கிறேன் பார்! என ஆரம்பித்தவன்,
வாள்! வில்! அம்பு! வேல்! குத்தீட்டி! இவைகளுடன்
அக்குடிலின் முன்நின்று, போருக்குத் தயாரானான்.
ஸ்ரீவஷிஸ்டபிரானும், எச்சலனமும் இன்றி,
அமைதியின் சாந்தியாய் எழுந்து வந்து.
அரசனை, ஓர் புன்முறுவலுடன் நோக்கி விட்டு,



14

அழித்து அவனை
ஸாந்தி செய்து
தம்மோடு ஐக்கியம்
படுத்துவதற்காக
ஸ்ரீவஷிஸ்டர் பிரான்
யோகமாயாவின் கருணை
யால் தம்மையே அர்ப்பணித்
தார் என்று உரை வேண்டும். ஓ முடிந்ததும்.

தம் **யோகதண்டை** (தண்டத்தை)
வாசலில், நிறுத்தி வைத்து விட்டு, உள்ளே சென்று
கண்களை மூடிவிட்டு! அறிவுக்கண்ணை திறந்து,
**பேரறிவில்**! நிலைத்து நிஷ்டை செய்தார்.
அந்த நிலையாவது:- எல்லாம் ஒன்றே, அந்த
ஒன்றே யாம்! யாமே அந்த ஒன்று, எமக்கு
அயலாக, **எவரும்/எதுவும்** இல்லை.
என பிரம்ம நிஷ்டானுபவராய், அமர்ந்து விட்டார்.
நம் கௌஷிகனும், தம் அஸ்திர சஸ்திர!
வித்தையின் மாயையும் மந்திர மாயையும், வாள்! வேல்!
குத்தீட்டி! கதை! என என்னென்ன உண்டோ
அத்தனையும் பிரயோகம், செய்து பார்த்தான்



15

தேவபசுவாகிய
நந்தினி யால்
ஓர் கசப்பு உணர்ச்சி
கலவரம்! யுத்தம்!
என வெறி ஆட்டம்
ஆடிவிட்டு போனதும்
கௌசிகன் பல பல
ஆயிரம் வருடம் கழித்து

மஹாபலம் பெற்றவனாய்
தொடரும்.

அவை அத்தனையையும், அந்த யோக தண்டமானது,
கபளீகரம் செய்து விட்டு, அரசே நீயும் வா!
உன்னையும் ஒன்றுக்கொள்வோம். என சொல்லாமல்
சொல்லி அரசனுக்காக காத்திருந்தது.
அரசன் கூனிக்குறுகிப் போனான்.
மான அவமானம் தாங்காமல்,
உடனே ஓர், வீராவேசத்தால்!
ஓர் பிரதிக்ஞை எடுத்தான்.

ஹே வஷிஸ்டரே! நான்! உன் போல்
ஜப தவத்தாலோ! யோக பலத்தாலோ! மந்திர பலத்தாலோ! உன்னிலும்
சக்திமானாகி!
உயர்ந்தவனாகி உன்னையும் வெல்வேன்! நானும் ஓர்
பிரம்மரிஷி! என ஆவேன் இது சத்தியம்
உம்மைப் போல், என்றான்.



16

நம் ஸ்ரீ வசிஷ்டர் குடிலுக்கு வரும் போது அஹங்கார, ஆதிக்க அதிகார, வெறியனும் வருபவனை கனிவான இன் மொழியால் மலர்ந்த முகத்தினராய்; தொடரும்

இந்த கௌசிகன், அதன் பின் நாடு செல்லவில்லை. கானகம் சென்று, அனேக ஸ்ரீ மஹான்களை தரிசனம் செய்து, ஆத்ம ஞானத்தின் / பிரம்ம ரிஷி, ஆவதற்கு நான், என்ன செய்ய வேண்டுமென்று, யோசனை கேட்டான். இவன் கர்மா / பலத்தால், இவன் சந்தித்த அத்தனை பேரும் ஞானம் / விடாத யோகிகளே. அனைவரும் சக்தி பெற, வழிகாட்டினார்களே ஆவர். தவிர ஜீவன் முக்திக்கு, வழிகாட்டவில்லை. இந்த அரசன், கௌசிகனும், அவன் விவேகியான படி, யோக / பலத்தையும், மந்திர / பலத்தையும், ஏற்றுக் கொண்டானே தவிர, ஞான விசாரணையை! ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இயலவில்லை. அதில் பொறுமையும் & பணிவும் / வலியுறுத்தி கூறுவதால், அதை இயலாத்தன்மை எனவிட்டுவிட்டான்.



(17)

வரவேற்கும் நம் வஷிஷ்டரைக் கண்டு அதிர்ந்தான் என்பது அவ்வரவேற்பே அவனுடைய அறியாமையின் துர்க்குணங்களுக்கு ஓர் சூடாமணி என உரைவேண்டும். முடிந்தது.


ஆத்ம ஞான விசாரணையானது கையாலாகாதவன் செயல் என்றும், அது ஒரு சோம்பேறியின் செயல் என்றும். அவன் கருதியதால், அதை ஏற்கவில்லை. சில ஸித்திகளின் பலன், சில கடும் சாதனையால், சில காலத்தில், கை வரப் பெற்றான். அச் ஸித்தியின் பலத்தால், ஸ்ரீ வஷிஸ்டர் பிரானை சந்திக்க, வெகு வேகமாக, வந்தான். அங்கு அவன் வினையும், விதியும், சதி செய்தது. எப்படி என்றால், தேவ மாது மேனகையை சந்திக்க நேர்ந்தது. அவள் மோக வலையில் சிக்கியவன் காமத்தால், தம் யோக ஸித்திகளின் பலனை, இழந்துவிட்டான். மிகவும் சோர்ந்து போனான். எப்படியும் அந்த பிராமணன், வஷிஸ்டனை, அழித்தே தீருவேன் என்ற, வெறியால் உந்தப்பட்டு, சில மாதங்கள் மௌனமாக,



(18)


முன் பக்கத்தில் கூறிய படி உங்கள் வினையாலும் எதிரியின் வினையும் மோதி பயங்கர விளைவு நிகழ்ந்திருந்தாலும் அவைகளை மறந்து இன்முகமும்! இன்சொல்லும்! சேவையும் உபகாரமும்! தொடரும்

மந்திரங்களை! ஸித்தியாய் பெற்று, அபூர்வ சக்திகளைப் பெற்றான். இந்த மந்திர பலத்தால், அந்த வசிஷ்டனை அழிப்பேன் என்று வேகமாக, எம் ஸ்ரீ வசிஷ்டர் பிரானை நோக்கி வந்தான். இங்கே இவன் வினையும்! விதியும்! சதி செய்தது. எப்படி என்றால்? வரும் வழியில், ஓர் சிற்றரசன்! அவன் நாமா திரிசங்கு! ஆகும். அவன் குலகுரு ஸ்ரீ வசிஷ்டர் பிரானாகும். அவன் [illegible], ஸ்ரீ வசிஷ்டரை உபேக்ஷித்து (விலக்கிவிட்டு) வேறொரு சாமான்ய குருவை! அபேக்ஷித்தான். அதாவது ஏற்றுக் கொண்டான். ஆகவே அவன், குருப்பிரஷ்டன்! (குருத்துரோகி) ஆனான். இங்கு பாடம் மாறிய தன்மையால், இவன் ஜீவன் முக்தி பெற தகுதியற்றவனானான். இவன் செய்த புண்ணிய பலத்தால், சொர்க்கம் சென்றான்.




சொர்க்கத்தின் நுழைவாசலில் செல்லும் போது,
சொர்க்காதிபதி இந்திரன், இவனை தடை செய்தான்.
திரிசங்கு:- இந்திரனே! நான் அனைவரும்,
தான தருமம் செய்து, புண்ணியம் தேடியவனாகும்.
ஏன் என்னை சொர்க்கம் செல்ல மறுக்கிறாய்?
இந்திரன்:- அரசே! நீ புண்ணியம் தேடியவன்
தான். ஆனாலும், நீ குருத்துரோகம் செய்த,
தன்மையால், இந்த சொர்க்கத்தில் உனக்கு
இடம் இல்லை. நீ பூலோகம் செல்வாயாக.

உன் குருத்துரோகத்தால், உன் புண்ணியம் சாம்பலாகி
இன்னொரு மனுஷ ஜன்மா எடுத்து புண்ணியம்
தேடி, அதன் மூலமாக சொர்க்கம் வருவாயாக.
என ஆக்ரோஷித்து, அவனை கீழே தள்ளிவிட்டான்
இந்திரன். அந்த திரிசங்கு சொர்க்கத்தி
லிருந்து, பூலோகம் வந்து கொண்டிருந்தான்.
அந்த திரிசங்குவை, இந்த கௌசிகன் கண்டான்.
திரிசங்கு, இவனுக்கு வேண்டப்பட்டவனாகும். ஆகவே
திரிசங்குவின், நிலை கண்டு, பரிதாபப்பட்டான்.




கௌஷிகன்:- நீ அங்கே!

என்றான் கௌஷிகன். இவன் தபோபலத்தால், திரிசங்கு அந்தரத்திலேயே நின்று விட்டான்.

ஏ அரசே! நீ ஏன் இப்படி, மேல் இருந்து கீழே வீழ்கிறாய்? உன் விருத்தாந்தம் என்ன?

திரிசங்கு:- சக்ரவர்த்தி பெருமானே! நான் புண்ணியம், பல பல செய்தும், எனக்கு அந்த சொர்க்கத்தில், இடம் இல்லையாம். அந்த இந்திரன் என்னை கீழே தள்ளி விட்டான்.

கௌஷிகன்:- ஏ இந்திரா! இந்த திரிசங்கு செய்த குற்றம் என்ன?

இந்திரன்:- ஹே மஹா ராஜாவா! இவன் ஓர் குருத்துரோகி! ஆகவே இவனுக்கு, இங்கே சொர்க்கத்தில் இடம் இல்லை.

கௌஷிகன்:- எந்த குருவிடம், இவன் அபசாரம் செய்து, குருத்துரோகி ஆனான்?

இந்திரன்:- பிரம்மரிஷி ஸ்ரீ வசிஷ்டர் பிரானிடம்.





சர்வவியாபகமாய் நிறைந்திருக்கும் தன்மையாகும்

இமித்திரன்!

என்றும் சகோதரத்வம் என்றும் நண்பன் என்றும் ஒற்றுமையின் ஐக்கியம்! என்றும் சொல்லலாம் தொடரும்

இது அவன் கொதித்தெழுந்த நிலையை காட்டுகிறது.

கௌஷிகன்:— பிரம்மரிஷியா? ஆ ஆ ஆ

ஆ ஆ ஆ ஆ ஆ! அந்த வஷிஸ்டனிடமா?

ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ! அந்த பிராமணனிடமா?

ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ! அந்த பார்ப்பனனிடமா??????


ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ

ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ

ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ

இது அவனுடைய விரோத| குரோத| ஆக்ரோஷ| அஹங்கார| ஆவேச| வஞ்சக| வஞ்சினத்தை| வேகப்படுவதை காட்டுகிறது.

(வஞ்சினம் = கடும்! கொடும் சினம்)



விஸ்வாமித்திரன் (22)
என்றால் வேதம்
இவ்வாமல் எல்லாம்
ஒன்றான நிலையில்
ஐக்கியமாக நம் மனம்
அறிவு ஆன நிலை
ஆகும் இது ஞானத்தின் முதிர்ச்சி ஆகும்.
இதுவே அஞ்ஞானத்த நிலையும் ஆகும் முழுமைக்கு.

ஏ வஷிஸ்டா? உம்மை என்ன செய்கிறேன் பார்
என்! இனத்தவனுக்கு, சொர்க்கம் இல்லாமல்
செய்து விட்டாயே? இது என்ன கொடுமை??
ஆனாலும் நான்! என்! நண்பனே!
கைவிடமாட்டேன். என் நண்பனுக்காகவே,
நான்! என்! தபோவலிமையால்,
ஓர் புதிய சொர்க்கத்தையே! உண்டுபண்ணுகிறேன்
பார். என சொல்லிய வண்ணம், இப்பூமிக்கே!
அச்சொர்க்கத்திற்கே மத்தியில், ஓர் புதிய
சொர்க்கத்தை! நிர்மாணம் பண்ணுகின்ற இந்த
கௌஷிகன். அது அந்தரத்தில். தலை கீழாக
அமைந்தது. அதை திரிசங்கு சொர்க்கம் என,
சொல்வதுண்டு. அச்சொர்க்கமே அவகாசம்



சாதுக்களுக்கு! ௨௩

யோக தண்டமும்!

சந்நியாசிகளுக்கு!

பிரம்ம தண்டமும்!

உண்டு என ஸ்ரீமஹான் கள் யாயிவாக அறிகிலேன்

இதன் விபரத்தை பின்னர் காண்க.

தொடரும்.

இருந்தும் பின் அது எப்படி பறந்ததோ? அது அப்படியே மறைந்துவிட்டது. இவன் தேடிய, மந்திர ஸக்தியின் பலனும், முழுவதும் தீர்ந்து அழிந்துவிட்டது. இந்த இரு தோல்வியையும், கௌஷிகன்! அதிகமாகவே சோர்ந்து போனான். இவன் விசு விதிக்கு! ஏற்றவாறு அமைந்த சிவமஹான்களிடம், ஆலோசனை கேட்டான். அவர்களும் கடைசியாக, ஓர்மார்க்கத்தை காட்டினர்கள். அம்மார்க்கம் தன்னையே (சரீரத்தையே) அர்ப்பணம் செய்து அழிந்து! எம்பெருமானிடம் சரண் கோருவதாகும். அச்சாதனை எப்படி, அமைகிறது என்றால்? ஓர்பெரிய ஐந்து முகம் உள்ள, அகல்! விளக்கு. (குத்து விளக்கும் அல்ல! பாவைப்பூ விளக்கும் அல்ல) அரவிளக்கும் அல்ல!



என் தேகம் இந்த யோக கண்டத்தின் அகல் விளக்கு ஆகும்.
இதன் தாத்பர்யம்

யோககண்டம் 24

இதுபொதுக்களுக்கு உரியது. இது **யோகமாயா** சம்பந்தம் கொண்டகளம். இது நாடியில் (நாடையை) தாங்கிட கீழே தரையை ஒட்டிய நிலையிலும் நாடையை தாங்கி பிடித்த நிலையிலும் தொடரும்.

அந்த அகல் விளக்கில் (மிகப் பெரிய விளக்கில்) **பசு** நெய்விட்டு, நான் அதில் (குப்புற) படுத்த நிலையில், அந்த ஐந்து முகத்திலும் ஐந்து திரியாக. (அகல் விளக்கு) **தலை 1, கால்கள் 2, கைகள் 2,** ஆக **ஐந்தையும்** (5 திரியாக வைத்து) எரிய விட்டு, அந்நிலையில், ஸ்ரீபஞ்சாக்ஷரம் ஜெபித்தாலும் அவ்வாறே நம் கௌசிகன், தன்னையே தியாகம் செய்த நிலையில் ஸ்ரீபஞ்சாக்ஷரம் ஜெபிக்கும் போது, இவன் பக்திக்கு, எம் ஸ்ரீராமன் மகிழ்ந்து திவ்விய காட்சி தந்து அருளினார்.

ஸ்ரீராமன் :– குழந்தாய்! கௌசிகா! **நீ!** கோரும் வரம் என்ன? **உன்தீ!** கவனம் வைத்து கேட்பாயாக?



முன் நின்றே என்றால் நம்முன் உடல் ஒட்டியநிலை யில் எல்லாம் ஒன்றே என்ற அத்வைத ஸ்தாபனமாகும்.

முன் நிலைத்த ௨௬

நின்ற நிலையால்!

எல்லாம் ஒன்றே

அந்த ஒன்றுக்கு அயலாக எதுவும்! எவரும்! இல்லை

என்பதை ஸத்தியப்பிரமாணமாக வலியுறுத்தும் தொடரும்

கௌஷிகன்:— பவவாருக ஸ்ரீ பகவானே! போற்றி பணிந்து கேட்கிறேன் ஹேமபரமேஸ்வரா பராத்பரா! நீலகண்டா! நீரண முதல்வா! சாம்பவா சங்கரா! சதாசிவா! சம்போ மஹாதேவா!

நான்! ஓர் மாபெரும், வேள்வி செய்யப் போகிறேன். அந்த வேள்வியை நடத்தித் தருபவர் ஸ்ரீ வஸிஷ்டர் மஹானாக இருக்க வேண்டும். அவ் வேள்வியில் ஓர் புருஷ பசுவின் அங்கங்கள்! ஸமிந்தாக அமைய (ஹிறாக) வேண்டும்.

அப்புருஷ பசுவானதை, பூரண சம்மதத்துடன் அந்த வேள்வியாகத்தின் அர்ப்பணம் செய்ய சம்மதிக்க வேண்டும். விரும்பாததை, அர்ப்பணம் செய்ய கூடாது. வேள்வியின் முழுமையான பூர்ணாகுதியாய் அப்புருஷ பசுவின் சிரம் பூர்ணாகுதியாக! அமைய வேண்டும். இவ்வே நான் கோரும் வரம் என்றான் கௌஷிகன்.



இ (26)

அந்த யோகதண்டை தாங்கியிருப்பவருக்கு உறுதுணையாகவும் பக்கபலமாகவும் இருக்கக்கூடிய ஓர் வரப்பிரசாத தடியாகும்.

பிரம்ம தண்டம்:— இது துறவி (சந்நியாசி)களுக்கு உரியதும் தொடரும்.

எம்பெருமானும், கட கட கட கட கட கட கட கட கட கட கட வென சிரித்து விட்டார்.

உன் எண்ணம்! நிறைவேறும்! என கூறிவிட்டு நீயும் மாற்றி அமைக்கப்படுவாய்!!

கோரும் வரம் தந்தோம் என, அருள்பாலித்து விட்டு, எம்பெருமான் அந்தர்தியானமானார். வரம் பெற்ற கௌஷிகன், ஸ்ரீவஷிஸ்டரை தேடி வந்தான். குடிலுக்கு வந்த கௌஷிகனை, எம் ஸ்ரீவஷிஷ்டர் பிரான் வரவேற்றார்.

ஸ்ரீவஷிஸ்டர்:— ஓ மஹாத்மாவே வர வேண்டும். ஓ மஹாரிஷியே வர வேண்டும். ஓ மஹாமுனிவரே வர வேண்டும். ஓ தபோதனரே வர வேண்டும். ஓ திவ்விய புருஷனே வர வேண்டும்; என இன்னும் பல பல, புகழ் வாசகங்களை, கேட்டதும் நம் கௌஷிகன் அதிர்ந்து! போனான்.

இந்த வஷிஸ்டரா, என்னை இப்படி யெல்லாம், புகழ்கிறார்? இவர் புகழும் நிலைக்கு நான் பெரியவன் ஆகிவிட்டேனா?



உ

இது அகத் துறவையும், ௨௭

புறத் துறவையும் வலியுறுத்தி இவை இரண்டும் காரண ஒழுக்கத்தில் அமைய வேண்டும் என்றும், மேலும் அத்திருவியில் தொடரும்

கௌஷிகர்:— பிரம்ம ரிஷி வஷிஸ்டரா என்ன புகழ்கிறீர்? ஆச்சர்யமாக இருக்கிறதே?

ஸ்ரீவஷிஸ்டர்:— இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது மஹாபுருஷரே? இல்லறத்தை விட்டு, துறவி ஆனால் அவன் மஹாத்மாவே! அதேபோல் தாங்களும், அரசை துறந்து மஹாதபஸ்வியாயி ஓர் நிலையை பெற்றுள்ளீர். ஆகவே தாங்கள் ஓர் மஹாரிஷியே!

கௌஷிகர்:— அப்படியானால், நான் இவகாலங்களுக்கு முன் செய்த அடாவடித் தனம் எல்லாம், மறந்து விட்டீர்களா?

ஸ்ரீவஸிஷ்டர்:— தாங்கள் சொல்லும், அக்காட்சி எங்கு நடந்தது? எப்படி நடந்தது? என்று நடந்தது? யார் நடத்தினார்கள்? எதற்கு நடத்தினார்கள்? (கௌஷிகர் இடைமறித்தார்)



பிரவர்த்தியை (28)

சொல்லாலும் செயலாலும்

செய்யமாட்டோம் என்னும்

நிவர்த்தியே!

எங்கள் சாதனையாகவும்! போதனையாகவும்!

தொடரும்.


கௌஷிகன்:— இது என்ன கேள்வி? நாம் இருவரும் காலை, இந்தக் கிடக்கில், சண்டை போட்டோம். அதை தாங்கள் மறந்து விட்டீர்களா வஷிஷ்டரே?

ஸ்ரீ வஷிஷ்டர்:— சண்டையா? நாம் போட்டோம்? வினையை வைத்து விதி விளையாடி இருக்கலாம். அவ் வினையும்! விதியும்! நாம் அல்ல! அது நம்முடையதும் அல்ல. அது மனமும் மாயாவும்! இணைந்து நடத்திய, ஓர் நாடகமாகும். அவ் விளையாட்டை, இன்னமும், ஞாபகம் வைத்திருக்கிறீர்களா மகரிஷியே?

கௌஷிகன்:— (உங்களை) மறக்கவா? மறக்க முடியுமா? மறக்கக் கூடிய விஷயமா? (வெளியில்) மறக்க முடியவில்லையே வஷிஷ்டரே! அது இரை மடிந்து விட்டதே?

ஸ்ரீ வஷிஷ்டர்:— கனாவை கழுவி, சுத்தம் பருகினால் தானே, அந்த சுத்தம் (பக்கியம்) பிரத்யக்ஷமாகும்?

இப்படி இவர்கள் இருவரும், பேசிக்கொண்டிருக்கும் போதே,



இருக்கும் என்பதும் பிறவர்க்கு
29

அணுப்பிரமாணம்

இருந்தாலும் அவன்
பிரம்மதண்டத்தை

ஏந்தத் தகுதியற்றவன்

என்பதும்; ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்
முடிந்தது.

புதிதாக, ஓர் ஸ்ரீமஹாத்மா வந்தார். வந்தவர் இருவரையும், நமஸ்காரம் செய்து வணங்கி, முதலில் பிராணாம் ஜீ என்றார். அவ்விருவரும், இணைந்த நிலையில், நமஸ்காரம் ஜீ என்றார்கள். பின் வந்தவர் பேசினார். அவரை மஹாத்மா! என்றே அழைப்போம்.

ஸ்ரீமஹாத்மா :- ஓ மஹாதபஸ்வியானவா, எம் கௌஷிகருக்கு! எம் இறைவன்! ஓர் நாமம் தந்தார். அதை சொல்லி விட்டுப் போகவே, யாம் வந்தோம்.

ஸ்ரீவஷிஸ்டர் :- மங்களம் பொருந்தும், அந் நாமம் எதுவோ? அதை அவையறியச் சொல் உங்கள் மஹாத்மா என்றார். அது சமயம் ஓர் மஹாத்துக்கள் சபையே, அங்கு கூடி விட்டது. அனைவரும் இணைந்தே ஏகோபித்த குரலில், நம் மஹாதேவன் தந்த நாமம் என்ன என்றார்கள்?

ஸ்ரீமஹாத்மா :- நம் ஸ்ரீமஹாதேவன் உரைத்த நாமம்! **விஸ்வாமித்திரர்!** ஆகும் என்றார். அங்கு கூடி இருந்த அனைவரும், நம் விஸ்வாமித்திரருக்கு, நமஸ்காரம் செய்தபடி,



இந்த கௌஷிகனுக்கு சிவ சிவ (30) மஹாத்மாக்கள் ஆத்மஞானத்தின் தன்மையானது பொறுமை! பணிவு! கருணை! அன்பு! ஈகை! எதையும் ஏற்றுக்கொள்ளல் விட்டுக்கொடுத்தல்! மறத்தல்! மன்னித்தல் ஆகும்.

அனைவரும் (வஷிஸ்டர் உட்பட) இணைந்து, அந்நாமம்! நிலைபெறட்டும்! அந்த நாமமாகவே அவர் ஆகட்டும். உலகம் உள்ளளவும், அவர் நாமம்! நிலைபெறட்டும்! (இதன் உட்கருத்து, யாதெனில், அந்த நாமம் தாங்கிய ரூபம்! குணதோஷ! சம்பந்தம் கொண்டால், அது நிலை பெறாது. அது பற்றி நமக்கு கவலையும் இல்லை. அது தேவையும் இல்லை என்றார்கள்.)

இப்போது, புதிய நாமம் பெற்ற, கௌஷிகர் திகைத்தார்! நாம் நினைத்து வந்தது ஒன்று! ஆனால் இங்கு நடப்பது வேறொன்று!! என எண்ணிய வண்ணம், நம் ஸ்ரீ வஷிஸ்டரிடமே கேட்டார்.



முதலிய வேத்த

இணை போதனையை (ஓ)

ஏற்றும் பழுவலியுறு

த்தினர். இவருடைய

வீராவேகம் அவ்

விவேகத்தை!

ஏந்த மறுத்து விட்டதும். அதன் காரணம்?

தொடரும்

வஷிஸ்டர்பிரானே! இந்த நாமாவின் பெருமையின், தன்மை என்ன?

ஸ்ரீ வஷிஸ்டர்:— அதையும் நம் இறைவன்! ஸ்ரீ சிவபெருமான் சொல்லியிருப்பார். அதையும் அவரிடமே, கேட்டு தெரிந்து கொள்வோம்.

ஓ மஹாத்மா ஜீ! எம் இறைவன் அந்த நாமாவின், பெருமையையும், சொல்லியிருப்பாரே, அதையும் உங்கள் வாக்கால் அவையறியக் கூறுங்கள்.

ஸ்ரீ மஹாத்மா:— நம் ஸ்ரீ பரமன் கூறியதாவது:—

**விஸ்வம் + மித்திரர்!**

விஸ்வாமித்திரர் ஆகும். விஸ்வம் என்றால், சரம்! அசரம்! மற்றும் அனைத்து ஜீவ கோடிகளும். (அசைவன! அசையாதன) எனப்பொருள்படும். மித்திரர் என்றால், நன்மையே! நண்பனே! நலம் என்ற மங்களமே! ஆகவே அன்று **சத்ருபயம்** இல்லை யென பொருள்படும்.



இது ஓர் சோகம் யோகியின் கதை என்றும்; கையாலாகாதவன் கதை என்றும்; ஏளனமாகவிட்டுவிட்டார். அறிவின் வேகத்தோடு போகப்பட்டவனுக்கு இதை ஒப்புக்க முடியாதும் முடிந்தும்.

இந்த ஸ்ரீ மஹாத்மாவாகிய! ஸ்ரீ மஹாரிஷியாகிய!
ஸ்ரீ விஸ்வாமித்திரரால், அனைவர்க்கும் பயம் இல்லை.
நம் அனைவராலும், அவருக்கு பயமும் தேவையும் இல்லை.
அவர் நாமமவால், நாம் அனைவரும் நிலை! பெறுவோம்.
என வாழ்த்தியவாறு, இவ்விருவரைத் தவிர அனைவரும்
அந்தர்த்யானமாயினர்.
பின்னர் வஷிஸ்டர் பிரான்! விஸ்வாமித்திரரைப்
பார்த்து, புன்முறுவலுடன் கேட்கிறார்.
ஸ்ரீ வஷிஸ்டர் :— ஓ எம் அருமை மஹாத்மா!
விஸ்வாமித்திரரே! இப்போ தாங்களுக்கு, எல்லாம்
ஆரண திருப்திதானே? எல்லாம் அவன் கிருபை.
ஸ்ரீ விஸ்வாமித்திரர் :— ஓ மஹாஞானியான, எம்
ஸ்ரீ வஷிஸ்டபிரானே! நான்! நடந்து கொண்ட
விதமும்; நான்! ஏன்! பலஆயிரம் வருஷம்!
கடும் தபஸில் ஆழ்த்தேன் என்ற விபரமும்;
தாங்கள் அறியாததல்ல? ஆனாலும் உம்மால்,
எப்படி அவைகளை, ஒன்று பொறுமையாய்! ஜீரணிக்க
முடிகிறது?



ஓ

இங்கு விஸ்வாமித்திரர்
நாமரூபம் பற்றிய ஓ
ஓர் சிறிய விளக்கம் தரப்
படுகிறது. கவனம் தேவை.

நாமம் | சூட்சுமமானது
ரூபம் | தூலமானது

அதேபோல் இயக்க குணம்
சூட்சுமம் இயக்கத்தின் தோற்றம் தூலம்
தொடரும்.

ஸ்ரீ வஷிஸ்டர்:– ஓம் ஐயனே! அன்பர்க்கு,
மெய்யனே! எமக்கு தாயனே! தாங்கள்
எம்மிலும் தனியாக இருந்தாலல்லவோ,
பகைமை சுயம்! ஆகிய குணதோஷம் பின்னலிலே
அன்றும்! இன்றும்! என்றென்றும்! நாம்!
இருவரும்! ஒன்றே! ஓ ஓ ஓ ஓ ஓ ஓ

ஒன்று சேர மறந்து போனதும் தாங்கள், நம்
ஸ்ரீராமனிடம், கேட்ட வரத்தின் படியும்!
கொடுத்த வாக்கின் படியும்! வேள்வி!
நடந்தே ஆகவேண்டும் அதை இந்த ஜெ
பாப்ப(ண)(வ)ன்தான்!
முடித்து உம்முள் மறைவான்!
" " நிறைவான்!!



ரூபமானது (ஓம்)

புண்ணிய பாபம் ... டது.

விஜ சம்பந்தம் கொண்

அந்தாவ இயக்கத்தினைவி

நான் புண்ணியபாபங்கள்

தோன்றுகிறதே யன்றி

சூட்சும நாமாவிற்கில்லவே இல்லை

ஆனால் தூல உடல் செய்வதை சூட்சும நாமாதான்

ஏற்றுக் கொள்கிறது. தொடரும்.

இந்த ஏழையை, மறந்து விட வேண்டாம் என்று தாங்கள் பாதம் பற்றி, பணிந்து வேண்டுகிறேன். என எம் ஸ்ரீ வஷிஷ்டர் பிரான்! அந்த ஸ்ரீ விஸ்வாமித்திரருக்கும் **பாத** நமஸ்காரம் செய்தார்.

ஆனால் அந்த, விஸ்வாமித்திரருக்கு, திரும்பவும், வஷிஸ்டருக்கு, பாத நமஸ்காரம் செய்ய முடியவில்லை! செய்ய இயலவில்லை! காரணம்?

**க்ஷத்திரிய!** தர்மம் அவர் கண்களை மறைத்துக் கொண்டது.

அதனால் அவர் **அறிவு!** கண் திறக்கவில்லை.

குறிப்பிட்டகாலத்தில், வேள்வி ஆரம்பமானது. கௌஷிகனாகிய, இந்த விஸ்வாமித்திரருக்கு,

**பார்ப்பனவன்!** ஆதிக்கம் அழிய வேண்டும் என்றும்;

**க்ஷத்திரிய!** மேல் இயக்கம் ஓங்க வேண்டும் என்ற, கோஷ குணம்!

இன்னமும் அழியவில்லை போலும்?



இந்த தூலவுடலையும்
சூட்சுமநாமாவையும் 35
இயக்குவது மனம்!
ஆகும். ஆகவே இந்த
சூட்சுமநாமாவானது மனம்
சம்பந்தம் ஆகிறது.
தூலவுடலானது மண் சம்பந்தம்
கொண்டதை உணர்க.
ஆகவே தூலமண் உடல் இல்லையானாலும் தொடரும்.

வேள்வியில்! மேவாளராக கௌசிக
ஸ்ரீ விஸ்வாமித்திரரும்!
நடத்துனராக பிரம்மரிஷி
ஸ்ரீ வஷிஸ்டபிரானும்!
உபசெயலாளர்களாக, மற்றும் மஹரிஷிகளும்!
வேள்வியில் மந்திரம், ஜபிக்கும் தலைவராக
புரோகிதராக
ஸ்ரீபிரம்ம தேவரும்! அமைந்தனர்.

ஸ்ரீ வஷிஸ்டர்:— சபைக்கும்! சபையோருக்கும்!
முதலில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்.
பின் சபையோரைப் பார்த்து, பிரதிக்ஞை நிலையில்
இதைச்
சொல்லுவார்:— ஹே பஞ்ச கர்த்தாக்களே!
ஹே பஞ்ச பூதங்களே! ஹே முப்பத்தி முக்கோடி
தேவ இந்திராதிகளே! ஹே அஷ்டதிக்கு
பாலகர்களே! ஹே ஸப்த ரிஷி மஹாத்
மாக்களே! மற்றும் அனைத்து, மஹரிஷி
மஹாத்மாக்களே! உங்கள் அனைவர்!
வெற்றியாகங்களிலும், இந்த எளியேனுடைய,



சூட்சுமமான 36

இ மண குண!

நாமத்திற்கு வேலையில்லை

ஆகவேதான் நாமரூபம் ஆக சொரூபம் என்றும்;

அதுவே புண்ணிய பாவ தொடர்புடையது என்றும்

நாமரூபத்தை விலக்கு என்றும்; பேசப்படுகிறது

முடிந்தது.

வஷிஸ்டர் என்ற நாமம் உடைய யாம்!

பிரமாணமாகச் சொல்கிறோம். இந்த

வேள்வியானது, தேவமஹரிஷி ஸ்ரீ விஸ்வா

மித்திரருடையதாகும். ஸ்ரீ பரம் பொருள்

பரிபூரண கிருபையால்! ஓர் கருவியா

க! இருந்து, இதை நடத்தி நிறைவு செய்கிறோம்.

இவ் வேள்வியில், இதற்குரிய மூலமந்திரம்!

21 இருபத்தி ஒன்றாகும். அந்த இருபத்தி ஒன்றுக்கும்

இருபத்தி ஒன்று சமித்தாக! (சிறுகுச்சிகளாக)

எம் அங்கங்கள் ஆகுதியாக

போடப்படுவோம்.



ஸ்ரீவஷிஸ்டரைக் காண வந்த விஸ்வாமித்திரரை முகமன் கூறி வரவேற்று முடிவில் ஸ்ரீபாத நமஸ்காரமும் செய்கிறார். ஆனால் அந்த விஸ்வாமித்திரருக்கோ அவருடைய கூடித்தெரிய வெறி

ஸ்ரீபாத நமஸ்காரம் செய்ய இடம் கொடுக்கவில்லை

நான்! எனது! விடாத வெறி பழுத்தும் பாட்டை உடைவும்.

முடிவில் பூர்ணாஹுதியாக! எம் சிரம்! போடப்படும். அதனால் இந்த வேள்வி பூரணமாகும்! எம் ஸ்ரீவிஸ்வாமித்திர மஹாத்மாவும்! அவர் பங்களிப்பும் நிறைவேறிய தன்மையினால், அவரும் ஆனந்த திருப்தியின்! எல்லை! ஆவார்!

எனதும் சிரசுறையை முடித்துக் கொண்டு, எம் ஸ்ரீபிரம்ம தேவன் துணை கொண்டு. வேள்வியை ஆரம்பித்தார் ஸ்ரீவஷிஸ்டபிரான்.

அதுவரை, மௌனமாகவே கண்டும்! கேட்டும்! இருந்த, ஸ்ரீவிஸ்வாமித்திரனின் உடல்! நடுங்கி! வியர்த்து! கொட்டியது. இப்படியும் நடக்குமா? என்றும், நடக்கமுடியுமா? என்றும்,



ரஜோ (38)

குணத்தை! ஸத்வ குணம்
போராடி ஜயித்தது
என்றால்? ரஜோ குணம்
என்பது இருள். ஸத்வ குணம்
என்பது ஒளி!

ஆனால் இவை இரண்டையும் கார்மேகம் என்றும்,
சூரியன் என்றும், கொள்ளலாம். ஞாடகம்

அவர் மனித உள்ளம் தானே? அங்குள்ள
பவரின், ஸத்வ குண பாவனையானது, இவர்
ரஜோகுண! உள்ளத்துடன், போராடி
அதை சாகடித்துக் கொண்டிருந்தது. இப்படி
நடந்து முடிந்தால், முடிவு என்னவாகும்?


ஓர் ஸ்ரீ மஹாத்மாவை இழக்க நேரிடுமே??

அவர் எந்த வறுமையும், ஸாந்தியும், அமைதியும்,
ஆனந்தமுமாகத்தானே இருக்கிறார்?
~~வேறு யாரும் என்னைப் போல்~~ கவிஞரோ? நாம்தானே
ஆர்ப்பரித்து கொக்கரிக்கிறோம்? இருமுறை,
கரும் சாதனையால், வல்லவ சக்திகளை பெற்று,
என்னபயன் கண்டோம்? அவை அனைத்தும்
விழலுக்கு, இறைத்த நீர் என, வியர்த்தமானது தானே?



ஆகவே இங்கு பவித்த காற்று (39)
வீசும்போதான் கார்மேகம் கலைந்து ஓடி விடும். அங்கே உடனே சூரியன் பிரகாசிப்பான்.
இங்கு பவித்த காற்று என்பது **சர்வாப்பணம்** ஆசை என உணர்க. முடிந்தது.

முதலில் **காமத்தால்!** அழிந்தது.
இரண்டாவது **விரோதகுரோத்தால்!** அழிந்தது. இந்த மோஹ, காம, விரோத குரோதமும்!
**நம்மை**த்தானே, கெடுத்து அழிக்கிறது.
அவரையோ! பிறரையோ! ஒன்றும் செய்யவில்லையே.
தன் வினை தன்னையே சுடும்! என்பது **என்!**
வகையில், சரியாகத்தான் இருக்கிறது. இங்கு
**என்னை!**த் தவிர, எல்லோரும் ஆனந்தமாகவே
இருக்கிறார்கள் **நான்!** ஒருவன் மட்டுமே தீராத
துன்பத்தில், சிக்கித் தவிக்கிறேனே காரணம் என்ன?
**என்னுடைய!** அகங்காரம்! அதிகாரம்! ஆதிக்க வெறி!
தானே காரணமாக இருக்கிறது?



இங்கு ஒன்றை (40)
உரை வேண்டும்.
நம் ஸ்ரீ வஷிஸ்டரின்
பொறுமையும்! புண்ணியமும்
வாக்கின் கனியும்!
இறை அன்பும்! அந்த
ஒன்றான ஓர்மையும்!
இருப்பது ஒன்றே! நடப்பது
நவமே என்ற உறுதியும்! கொடடும்.

ஒருவரை அழிப்பதால் நமக்கு என்ன லாபம்?
அவர் மேல் உள்ள, ஆதிக்க வெறியினால், நம்மை
நாமே அழித்து, நம்மை இழப்பது எத்தனை அறிவீனம்?
இயற்கையின் அருட்டியால், எல்லோருமே,
இறைவன் குழந்தைகளாக இருக்கும் போது,
நம்மைக் கெடுக்கும் இந்த உடைமையும்!
உரிமையும்! ஏன்? ஏன்? ஏன்?
ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்?
ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்?
எனக்குள்ளே எழுந்த, மனப் போராட்டத்தில்!

விஸ்வாமித்திரர் அணு அணுவாக! அணு அணுவாக!
அணு அணுவாக! அணு அணுவாக! அணு அணுவாக!
அணு அணுவாக! அணு அணுவாக! அணு அணுவாக!
அணு அணுவாக! அணு அணுவாக! அணு அணுவாக!



தன் நிலையில் (41)

மஹா மேருவை போல் அசைக்கமுடியா நம்பிக்கையும் இனம்! மனம்! குணம்!

தோஷம்தாக்கும் போது நாணல் புல் போல் வளைந்து, நெளிந்து, பணிந்து செய்யும் கருணையும் தான் விஸ்வாமித்திரரை மாற்றி விட்டதும் முடிந்ததும்.

(சேர்ந்து) இறந்து கொண்டிருந்தார். அதாவது

நான்! என்ற!! ஆகு!!!

இறந்து, அழிந்து கொண்டிருந்தது.

பணியாக! உடல்! கூனி, குறுகி, உருகி, சாய்ந்து விட்டது. (மெழுகுவர்த்தியென உடல் உள்ளேயே உருகி உள்ளம் பழம் என கனி ஆகியது.)

கனியாக! உள்ளம், கனிந்த கனியென, பக்குவம் அடைந்து கொண்டிருந்தது.

இதே நேரம், வேள்வியில் அமர்ந்திருந்த, எம் ஸ்ரீவஷிஸ்டர் பிரான்! அவருடைய வாக்குப்படி, தன் கடமையை, செய்து கொண்டிருந்தார். வேத கோஷ மந்திரங்களில், மூழ்கி இருந்த எம் ஸ்ரீபிரம்ம தேவனும்! தன் கடமையை, குறைவின்றி நிறைவாக செய்து கொண்டிருந்தார்.



விஸ்வாமித்திரர் தான் செய்த

(42)

**தவறை** அட்டிக் காட்டும் போதும் எம் ஸ்ரீ வஷிஸ்டர் சொல்லும் பிரம்மம் என்ற நிலையால் விலையால்

**முன்வல்**

**மனம்** ஆகும். அங்கு அதை

**விஷ்ரு** ஆட்டி முடிக்கும். அங்கு சாதனியாளர் தொடரும்.


எம் ஸ்ரீ வஷிஸ்டர் பிரானர் சொன்ன அங்கங்கள் இருபத்தி ஒன்றும் எது வென்றால்?

வலது காலில் ௫ விரல்கள், பின் கணுக்கால் 1. பின் முழங்கால் 1. அதே போல், இடது காலில், ௫ விரல்கள், பின் கணுக்கால் 1. பின் முழங்கால், 1. அதே போல், இடது கையில், ௫ விரல்கள், பின் கணுக்கை, 1. பின் முழங்கை 1. ஆக மொத்த எண்ணிக்கை, **21** ஆகும்.

இந்த இருபத்தி ஒன்றும் வரிசைக் கிரமமாக, ஒவ்வொன்றாக, காய்கறியை நறுக்கிப் போடுவது போல்; ஒவ்வொரு மந்திர முடி விழும்; நிதானமாக, பொறுமையின் ஆனந்தமாக,

**வெட்டி! வெட்டி!! வெட்டி!!**

அக்கினியில் போட்டுக் கொண்டே வந்தார்; எம்



திட உணர்வு (43)

குன்றாமல், உறுதியாக கொடுத்ததை வாங்குகிறோம் வாங்கியதை கொடுக்கிறோம் என்பதும், கணக்கு முடிகிறது என்றும், எல்லாம் நீயே என்று பரிபூரண சரணாகதியில் தன்னை

முழுமையாக முடித்துக் கொண்டாரின் பயம், கவலை சந்தேகம் வேண்டாம். பயமே பலிகம் என்பதை உறுதி கொள்ள வேண்டும்.

ஸ்ரீவஷிஸ்டர் பிராணும் முடிவில் வெற்றி

நிறை வேறும் நிலையில், **பூர்த்திக்காக** நம் **சிரத்தை**யும் தேவை!

வெட்ட முயலும் போது, நம் விஸ்வாமித்திரர் உடனே எழுந்து, கத்தி, கதறி, அழுது, தொழுது, உரத்த குரலில் :— ஹே பஞ்ச கர்த்தாக்களே! ஹே பஞ்ச பூதங்களே! ஹே முப்பத்து முக்கோடி இந்திராதி தேவர்களே! ஹே அஷ்டதிக்கு பாலகர்களே! ஹே ஸப்த ரிஷிகளே! மற்றும் அனைத்து, மஹாத்மா, பரமஹாத்மாக்களே! மற்றும் பிரம்மஞானத்தமராயும் அந்தண சிரேஷ்டராயும் அனைத்தையும் சாட்சியாய் **பார்ப்பவராயும்** தவமஹரிஷியான **பிரம்மரிஷியான!**



ஸ்ரீ விஸ்வாமித்திரர்
அருந்தவ, தபஸ்வி
கத்தி கதறி
ஸ்ரீ வசிஷ்டர் திருவடி
யைபற்றி அழும்போது
எம் ஸ்ரீ வசிஷ்டர்
ஸ்ரீ விஸ்வாமித்திரரை
தூக்கி, ஆரத்தழுவி
உச்சிமோந்து முத்தமிட்டு
நீயே ஆவாய் என
**பிரம்மரிஷி**
ஆசீர்வதித்து வாழ்த்துகிறார்.

எம் ஆத்மானந்த **ஸ்ரீலஸ்ரீ பூஜ்யஸ்ரீ! திடஞானி** யான எம் **ஸ்ரீ வசிஷ்டர்!** அவர்களே! இந்த பதிதனை! இந்த மஹாபாவியானை! இந்த மஹாபாதகனை! இந்த குருபிரஷ்டனை! இந்த ஏழை **கௌஷிகனை!** மன்னித்து, எம்மை க்ஷமிப்பீர்களாக. எமக்கு இங்கு வாழ்க்கையும், இயல்பாக மாறுகிறது. எந்த தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள். எந்த நரகத்தில் வேண்டுமானாலும் தள்ளுங்கள். அனைத்தையும் **தலைவணங்கி** ஏற்றுக் கொள்கிறேன். வேள்வியை நிறுத்துங்கள்! எம் ஸ்ரீ வசிஷ்டரை காப்பாற்றுங்கள்.




திருவடி நமஸ்காரம் (45)

என்ற நிலையில் நாம் ஸ்ரீ **பாதம்** பற்றும் போது. **அவர்** திருமுடியும் இயல்பாகவே சாய்ந்து கீழே உன்னை நோக்கி வருகிறது. திருமுடியை காண எந்த முயற்சியும் பயிற்சியும் வேண்டாம்.

மேலும், இந்த வேள்வி, ஆகுதி ஆக வேண்டுமானால், அல்லது **எம்மை** யாமே பலி கொடுக்கிறோம். நீங்கள் பலி கொடுத்து விடுங்கள். இந்த **அரியணை!** இன்னமும் இவ்வுலகில் இருக்க வேண்டாம். என சொல்லி, அழுது, அரற்றி, கதறிய படி, ஓர் **மரம்!** முறிந்து விழுவது போல். அடியற்ற மரம் போல் ஸ்ரீவசிஷ்டர் திருவடியை பற்றி, சாஷ்டாங்க தெண்டனிட்டு நமஸ்கரிக்கிறார்.

சபையில் இருந்த அனைவரும், ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தனர். இதையே நெடுங்காலமாக, எதிர்பார்த்துக் கொண்டிருந்த, எம் ஸ்ரீ வசிஷ்டர்பிரான் புதிய **அங்க!** பொலிவுடன், எழுந்து நின்று, அன்போடு ஓர் வார்த்தை சொல்லுவார்:— **ஹே ஸ்ரீ பூஜ்ய ஸ்ரீ ப்ரம்மரிஷியான** யாம் போற்றி பணியும் **விஸ்வாமித்திர** மஹாத்மாவே!





எழுந்திருங்கள். எந்த தப்பும் பண்ணாத காரியங்கள்
ஏன் மன்னிப்பு கோர வேண்டும். தப்பு தவறு!
குற்றம் குறை, எவரிடமும் இல்லையாயின். எல்லாம்
அதுவாகிய அவன் செயல் என்றார்.

நம் ஸ்ரீ விஸ்வாமித்திரரும், பக்கத்திலேயே
தலையை மட்டும், மேலே தூக்கி, எம் ஸ்ரீ வஷிஸ்ட
பிரானிடம் பார்த்தபடி, ஆனந்த பாஷ்பம் ஒழுக!

கேட்கிறார் :- ஹே வஷிஸ்ட மஹரிஷியே!
ஹே மஹாத்மாவே! இந்த **எளியோனை**
**பிரம்மரிஷி** என தாங்களா அழைக்கிறீர்கள்?

ஸ்ரீவஷிஸ்டர் :- அதில் சந்தேகம் என்ன? உம்மை
நான் அவ்வாறு அழைக்கிறோம்.
விஸ்வாமித்திரர் :- புரியவில்லையே தேவாதிதேவா!
இந்த பிரஷ்டனுக்கா, அந்த புனித நாமம் கொடுத்தீர்?
அந்த தகுதி, எனக்கு எப்படி பொருந்தும் ஐயனே?
இந்த ஒழுக்க சட்டனுக்கு, எவ்வாறு பொருந்தும் தேவா??



காணும் நாம ரூபம் (47)
ஜோடி குணம்
சம்பந்தம் கொள்வதால்
காணும் பொருளாகிறதே
காண்பவன் சாந்தியின்
அம்சமாக ஸ்ரீபகவானாக
இருப்பதால் காண்பவனாகிறு

என்று ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

ஸ்ரீ வஷிஸ்டர்:— ஓம் பிரம்ம-ஞானியான, எம் அருமை விஸ்வாமித்திரரே, எந்த சாதகனிடம்!

உடலில் பணிவும்!
வாக்கில் கனிவும்!!!
வாழ்க்கையில் பொறுமையும்!

நிறைந்து, பொங்கி, ததும்பி, வழிகிறதோ?

அவனிடம் சர்வார்ப்பணம் நிறைவு பெறும்.

" பிரம்மார்ப்பணம் உறுதி ".

அவன் பிரம்மஞானியாக திகழ்வான்.

அவனே பிரம்மரிஷி என போற்றப்படுவான்.

அவனுக்கு உலகியலில், கர்மா முடிவுறுகிறது.

அவன் தெய்வீகத்தில், சாட்சி நிலையையும் தாண்டி,

பர நிலையில் சர்வ சாட்சி நிலையில், நிலை பெறுகிறான்.



ஸ்ரீ வஸிஷ்டர் வாக்கு:-

48

ஒருவன் நான்!

என்னைத் விடாத

நிலையில் அஹங்கார!

அதிகார! ஆதிக்க!

காம வெறியை

இருந்தபோதும் மனம் திருந்தி நொடிக்கும்

இவனிடம் ஏங்கும் ஏக்க! துடிப்பும்;

" அவன் ஆக வேண்டும்! அதில் நான் பெற

வேண்டும்! என்ற மன உருக்கமும்;

அவ்வுருக்கத்தின், கண்ணீர் பெருக்கமும்;

உடையவனாக இருப்பான்.

ஸ்ரீ விஸ்வாமித்திரர்:- ஹே மஹாத்மா! நீங்கள்

இதுவரை கூறியவைகளில், ஒன்று வது எம்மிடம்

இல்லையே. யாம் மஹாபாபியாகவல்லவோ இருந்திருக்

கிறோம். பிராம்ம(ண) பிரம்மத்தை உணர்ந்தவனின்

துவேஷியாக வல்லவோ, இருந்திருக்கிறோம்.

உம் மீதும், மற்றும் ஸ்ரீமஹான்கள் மீதும்! போட்டி

பொறுமை! கொண்டு, விரோத குரோதியாகவல்லவோ

இருந்திருக்கின்றோம். முழு காமியாக வல்லவோ

இருந்திருக்கின்றோம். நான்! நான்! என்ற

அஹங்காரத்தை விடாத நிலையாலும், எனைவ! என்ற



மனம் வருந்தி! (49)

மனம் உருகி!

கரைந்து! கதறி!

அழுது முறையிட்டு

இறைகுரு சந்நிதியில் சரண் புகுவோரையாளும் தொட்டும்

ஆசிக்க, அதிகாரத்தை விடாத நிலையிலும்;

எனது! என்ற, உடைமையை விடாத மன

மடையனாக! வல்லவோ இருந்திருக்கிறேன்.

இந்த ஊண! மண! ஜண! துரோகியை!

எப்படி ஐயனே ஏற்றுக் கொண்டீர்கள்?

ஸ்ரீவஷிஷ்டர்:- குழந்தாய்! விஸ்வாமித்திரா!

நீ சொன்னவை அனைத்தும், கடந்த! முடிந்த!

கனவின் காட்சிகளாகும். எவனொருவன். தான்

செய்த (அறிந்தும் அறியாமலும் செய்த) தவறை!


எண்ணி எண்ணி! எண்ணி எண்ணி! எண்ணி எண்ணி!

எண்ணி எண்ணி! எண்ணி எண்ணி! எண்ணி எண்ணி!

எண்ணி எண்ணி! எண்ணி எண்ணி! எண்ணி எண்ணி!

ஏங்கி கண்ணீர் வடிக்கிறானோ!

அவன் செய்த பாவம் முழுவதும் கழுவப்பட்டு, அதத்



அவன் **பாவம்** (50)
அந்த வினாடியே நீங்கி
பெறுகிறான் இது ஸத்தியம்.
ஆனால்?
அவன் அமைத்து அக்காரியம்
பண்ணாமலிருக்க முயற்சி
செய்ய வேண்டும் அது அவன் பொறுப்பாகும்

உண்மையாகவே உருகி அழுதால் அவன் திரும்பவும்
பாவம் செய்ய முடியாதும் செய்ய இயலாது இது ஸத்தியம்.

**தூய்மை** பெறுகிறான். இதன் உண்மை
என்னவென்றால்?
ஒருவன் தான் செய்த, **தீமையை** உணர்ந்து,
இறைகுரு சந்நிதியில், உருகி அழுது முறை
யிட்டானாகில், அவன் அறிந்தும், அறியாமலும்
செய்த **பாவம்** அனைத்தும், பஸ்மமாகிவிடும்.
அதைப்போலவே?
ஒருவன் தான் செய்த **நன்மையை**
(தற்பெருமையாக)
இறைகுரு சந்நிதியிலும் மற்றும் எவரிடமும்
**வாய் விட்டு** சொல்வானெயின், அவன்
செய்த நன்மை அனைத்தும் அவனை விட்டு
மறைந்துவிடும், செய்த பாவம் உணர்ந்து
அழுதால் தீரும் என்பர் பெரியோர். அதே
நிலையில், இங்கு எங்கும் நடைபெறும் சமயம்,



51

பாவம் செய்யாது
இருப்பது அவன்
பொறுப்பு என்றால்?
அவனுக்கு எது பாவம்?
எது புண்ணியம்? என
பகுத்துப் பார்க்கவும்
விட்டு விலகவும்! விலக்கவும் அவனால் இயலாது.
காரணம் அவன் **ஜீவ!**


இறைப்பு ஓவியப்பான் மனமொரம்.
தொடரும்.

உன் **நவனை!** உணர்ந்து உணர்ந்து!
அதைத்தையும், எண்ணி எண்ணி, உன்னையே
அழுது அழுது! **நீ** இறந்து விட்டாய்!

இப்போது, கௌஷிக மன்னன்! இறந்து சாம்பல்
ஆகி விட்டான்.

இப்போது, புனிதமான, விஸ்வாமித்திரர்! அனைத்து
ஜீவ கோடிகளும், இணைந்து ஒன்றாக்கிக் கொண்ட
ஸ்ரீ மகாத்மா
என்ற, மகாரிஷியும் & யோக புருஷனும், இணைந்த,
பிரம்ம ஞானியான, **பிரம்மரிஷி**யான!
**விஸ்வாமித்திரரே!** இங்கு
பிரத்தியட்சமாக இருக்கிறார்.
இங்கு ஸ்ரீபிரம்மரிஷி பட்டத்தை, ஸ்ரீவஷிஸ்டர்
பிரான்! ஸ்ரீ விஸ்வாமித்திரருக்கு! கொடுக்கும் போது,
ஸ்ரீபிரம்ம தேவன்! ஸ்ரீமந் நாராயணன்! ஸ்ரீசிவபெருமான்!
ஆகிய மூவரும்! அங்கு பிரத்தியட்சமானார்கள்.





இவன் கொஞ்சம் (52)
அடங்கி இருந்து
இறை உரு! சந்நிதியில்
முழுமையாக மூழ்கிறவன்
நடைபெறும் நிகழ்ச்சி
மற்றும் நடைபெறும்
மற்றும் வினை தொடர்பான
அஸம்பாவித நிகழ்ச்சி நடைபெறுமல்
தொடரும்

ஸ்ரீ! கர்த்தாக்களும்! இணைந்த குரலில் கூறியதாவது,
க்ஷத்திரிய! குலத்தில் பிறந்து;
வீரா! வேகத்தால் வளர்ந்து;
பணியாமையில்! சிறந்து;
நான்! என்னில்! எனது! என்ற அஹங்கார!
அதிகார! ஆதிக்க! அபிமானத்தில்! ஊறி!
வணங்காமுடியனாகி!
முடிவில், பணிவு பொறுமையின்! சிகரமான,
ஸ்ரீ பிரம்ம ஞானி! வஷிஸ்டரிடத்தில், மோதி!
அஹங்கார, ஆதிக்க, அதிகார, அபிமானம், நொறுங்கி,
பொடிப் பொடியாகி, அவைகளே, ஜீவ அணுவாகிய,
பரமாணுக்களாகி! பரப்பிரம்மத்
துடன் கலந்து, பரிபூரண நிலையை பெற்றதனால்;



மாயா! தன் (63)

காட்சியை விலக்கிக் கொண்டதும், அத்துடன் பின்னி விளையாடும், தன் மகன் மனதையும்!

தானே உதறிக் கொண்டும் மாயாவும்! அதன் மனமும்!

செயல் இழந்து விட்டால் போதும். அதுவே சாதகியான் முழுவதும் தொடரும்.

பிரம்மரிஷியாகிய, ஸ்ரீ வஷிஸ்டர்! வாக்காலேயே,

பிரம்மரிஷி பட்டம் பெற்ற எங்கள் தவசீலனே! விஸ்வாமித்திரா!


உன் பிராரப்தமாவும், சஞ்சாரம் முடியும்வரையும்,

யதேச்சையாய், சஞ்சாரம் செய்வாயாக. எங்கள் அறிவு! சொருபமாக, பிரகாசிப்பாயாக.

உன் வாழ்க்கைப் பாடமானது, ஞான சாதகியானோர் அனைவர்க்கும், ஓர் பாடமாக அமைய வேண்டும்.

எப்படி என்றால்? :- ஆன்மீக சாதகியானோர்களே!

என்போன்று, காமத்திலும்! விரோத, துரோகத்திலும்! சிக்கிக் கொள்ளாதீர். போட்டி பொறாமையில் மூழ்கி விடாதீர்.



உலக எங்கு நிகழ் (54)

நீதியும், படக்காட்சியாய்

முடிவும், அழுகையும்

சாந்தியானதன்மையாய்

கண் இருந்தும் குருடாய்!

காது இருந்தும் செவிடாய்!

வாய் இருந்தும் ஊமையாய்!

உள்ளநிலை அவஸ்தையும் பெறுவாம்.
இவ்வுலக நாயகியின் அனுபவமாகும். முடிந்தது.

எம் வாழ்க்கை! உங்களுக்கு ஓர் பாடமாக அமைவதாக.
என்ற நிலையில், மெய் அன்பர்களுக்காகவே, வாழ்ந்து
காட்டிய, உன்னை பாராட்டுகிறேன்.
மனோநலம் பெறுவாய்! ஆன்ம சுகம் பெறுவாய்!!

# பிரம்மானந்தத்தில் நிறைவாயாக!

என வாழ்த்திவிட்டு மறைந்தார்கள்.
எம் ஸ்ரீ வசிஷ்டபிரானும்! சாதனையில் ஒருவனுக்கு,

# பொறுமையும்!

# பணிவும்!

எந்த அளவுக்கு, பிரகாசிக்கிறதோ, அவனுக்கு
அன்பு! கருணை! கனிவு! சகித்தல்! போதும் என்ற நிறைவு!
நம்பிக்கை! வைராக்கியம்! வாக்கிய சிரத்தை!
இவைகளின் ஒட்டுமொத்த, **அடக்கம்**! ஆகியவை
இயல்பாகவே, பயிற்சி முயற்சி! இல்லாமலேயே,
சாத்தியமானதாக என, வாழ்த்தி ஆசி வழங்கினார்.
எல்லாம் ஒன்றே! இருப்பது ஒன்றே!
அதுசுத்தசிவமே! நடப்பது நலமே!!

பாபா.

அதுவாகமே! அதுவேயாம்! இது சத்தியம்.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!